புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2049 | மார்ச் 29, 2018 | புரட்சி 17 | முழக்கம் 11 | விலை: ரூ.3.00

## தமிழ்நாடு மாணவர் கழகம் ஆர்ப்பாட்டம்

# மத்திய அரசுப் பணிகளில் மாநில மக்களையே அமர்த்து!

**தமிழ்நாட்டில் மத்திய அரசுப் பணிகளிலும் தமிழ்நாட்டின் அரசு மற்றும் ஆசிரியப் பணி நியமனங்களிலும் வடநாட்டுக்காரர்கள் குவிந்து வருவதைக் கண்டித்து சென்னையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது.**




மத்திய அரசுப் பணிகளில் பறிபோகும் தமிழர் உரிமைகளைக் கண்டித்து தமிழ்நாடு மாணவர் கழகம் சார்பில் மார்ச் 22, 2018 காலை 10.30 மணியளவில் சென்னை வள்ளுவர் கோட்டம் அருகே கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது. தமிழ்நாடு மாணவர் கழக அமைப்பாளர் பாரி சிவக்குமார் தலைமை தாங்கினார்.

நிகழ்வில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், மல்லை சத்யா (ம.தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர்), சங்கர் (மேலாண்மை இயக்குனர், சங்கர் அய்.ஏ.எஸ். அகாடமி), அருண் முருகன் (மே 17 இயக்கம்), வேணுகோபால் (தமிழக வாழ்வுரிமை கட்சி), டைசன் (தமிழர் விடியல் கட்சி), எம்.எஸ். வெங்கடேசன் (பொதுச் செயலாளர், வருமானவரி ஊழியர் சங்கம்), ஜி. குணவதி (வருமானவரி பிற்படுத்தப்பட்டோர் ஊழியர் சங்கம்) ஆகியோர் உரை யாற்றினர். அன்பு. தனசேகர் (வருமான வரித் துறை) நிகழ்ச்சியை ஒருங்கிணைத்து ஏற்பாடு செய்தார்.

நிகழ்வில் தொடர்வண்டித் துறை, சிண்டிகேட் வங்கி, ஆவடி டேங்க் தொழிற்சாலை ஊழியர்களும், சங்கர் அய்.ஏ.எஸ். அகாடமியில் பயிலும் மாணவர்களும் தமிழ்நாடு மாணவர் கழகத் தோழர்களும் பெருமளவில் பங்கேற்றனர். தேன்ராஜ் நன்றி கூறினார்.

மத்திய அரசு தேர்வாணையத்தின் அகில இந்திய தேர்வுகளை இரத்து செய்து, மீண்டும் மாநில அளவில் தேர்வுகளை நடத்து! தேர்வுகளை மாநில மொழிகளில் நடத்து! பணி நியமனங்களில் அந்தந்த மாநில மக்களை பணியில் அமர்த்து! என்ற மூன்று கோரிக்கைகளை முன் வைவத்து இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

கடந்த 2013 முதல் 2016 வரை மத்திய அரசு தேர்வாணையத்தில் உருவாக்கப்பட்ட பணியிடங்களில் 1988 வடநாட்டுக்காரர்கள் தமிழ்நாட்டில் பணியில் அமர்த்தப்பட்டுள்ளதையும், 110 பேர் மட்டுமே (6 சதவீதம்) தமிழர்கள் என்பதையும், தமிழக மத்திய அரசு துறைகள் இந்திக்காரர்களாலேயே ஆக்கிரமிக்கப்பட்டு வருவதையும் கண்டன உரையில் பலரும் சுட்டிக்காட்டினர்.

தேர்வாணையம் நடத்தும் தேர்வுகளில் பீகார், ராஜஸ்தான் போன்ற வடமாநிலங்களின் பயிற்சி நிறுவனங்கள் கள்ளக் கூட்டு வைத்துக் கொண்டு மோசடிகள் செய்து வருவதையும் ஆர்ப்பாட்டத்தில் பேசியவர்கள் குறிப்பிட்டனர்.

இப்படி மோசடியாக வருமான வரித் துறையில் பணியில் சேர்ந்த மூன்று பேர் பணி நீக்கம் செய்யப்பட்டனர். 2014ஆம் ஆண்டு தேர்வில் மோசடிகள் நடந்ததால் தேர்வுகள் இரத்து செய்யப்பட்டன. நேர்முகத் தேர்வு ஏதும் இல்லாத நிலையில் வடமாநிலத்தவர் எழுத்துத் தேர்வில் இலஞ்சம் கொடுத்து தேர்ச்சிப் பெற்று விடுகிறார்கள். அஞ்சல் துறையில் கடைநிலை ஊழியர்களுக்கான தேர்வுகள் அந்தந்த மாநிலங்களில் நடத்தப்பட்ட நிலை மாற்றப்பட்டு அகில இந்திய அளவில் நடத்தப்பட்டு வருவதால் தமிழே தெரியாத வடநாட்டுக்காரர்கள் தமிழில் அதிக மதிப்பெண் பெற்ற நிலையில், மோசடிகள் வெளிச்சத்துக்கு வந்தன. இதனால் கடந்த ஆண்டு அஞ்சல்துறை ஊழியர்களுக்கான தேர்வும் இரத்து செய்யப்பட்டது.

இப்போது மிகக் குறைந்த ஊதியம் பெறும் மத்திய அரசுத் துறைக்கான கடைநிலை ஊழியர்களுக்கான தேர்வும் இந்த ஆண்டு முதல் அகில இந்திய அடிப்படையில் தேர்வாணையத்தால் நடத்தப்படும் என்று மாற்றி விட்டார்கள். கடைநிலை ஊழியர் நியமனங்களும், இனி வடநாட்டுக்காரர்களுக்கே கிடைக்கும் நிலையை உருவாக்கி விட்டார்கள்.

வங்கிப் பணியாளர் தேர்வுகளில் மாநில மொழி பேசுவோரே தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்ற விதி மாற்றப்பட்டுவிட்டது. 'பாரத ஸ்டேட் வங்கி' கடந்த ஆண்டு ஆங்கில மொழி மட்டுமே அடிப்படைத் தகுதியாக்கிவிட்டது. இதனால் இந்த வங்கியின் நியமனங்களில் தமிழ்நாட்டு இளைஞர்கள் உரிமைகள் பறிக்கப்பட்டு, வடமாநிலத்தவரும் கேரளத்தவரும் பெருமளவில் குவிந்து விட்டனர்.

தமிழ்நாட்டிலுள்ள இந்திய அரசு நிறுவனங்களில், தொழிற்சாலைகளில் தொடர்ந்து, தமிழர்கள் புறக்கணிக்கப்பட்டு வரும் நிலையில், இப்போது தமிழ்நாட்டு அரசுப் பணிகளிலும் வெளி மாநிலத்தவர்கள் புகுத்தப்படுவதாக வரும் செய்திகள் கடும் அதிர்ச்சியளிக்கின்றன.

தமிழ்நாட்டிலுள்ள பல்தொழில்நுட்பக் (Polytechnic) கல்லூரிகளில் உள்ள 1058 விரிவுரையாளர் காலிப் பணியிடங்களுக்காக "ஆசிரியர் தேர்வு வாரியம்" (Teachers Recruitment Board) வழியே கடந்த 16.09.2017 அன்று எழுத்துத் தேர்வு நடைபெற்றது. சற்றொப்ப 1,33,567 பேர் அதில் பங்கேற்றனர். அத்தேர்வின் முடிவுகள் கடந்த 07.11.2017 அன்று ஆசிரியர் தேர்வு வாரிய இணையதளத்தில் வெளியிடப்பட்டன.

பதிவு எண்கள் பலவற்றை தனித்தனியே எடுத்து அவர்களின் பெயர்களைப் பார்த்தபோது, அவற்றில் பெரும்பாலானவை குப்தா, ரெட்டி, சர்மா, நாயர், சிங், பாண்டே என்ற பின்னொட்டுடன் கூடிய வெளி மாநிலத்தவர்களின் பெயர்களாகவே இருந்தது கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இதே ஆசிரியர் தேர்வு மையம் கடந்த 31.05.2017 அன்று, பட்டதாரி ஆசிரியர் மற்றும் சிறப்புப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களுக்கான தேர்வு முடிவுகளை வெளியிட்டபோது, பதிவு எண்ணுடன் பெயரையும் குறிப்பிட்டிருந்தனர். அதற்கு முன்பு 27.04.2017 அன்று அரசுப் பொறியியல் கல்லூரிகளில் பணிபுரிவதற்கான துணைப் பேராசிரியர் பணியிடங்களுக்கான தேர்வு முடிவுகளிலும், பதிவு எண்ணுடன் பெயரும் குறிப்பிடப்பட்டிருந்தது. கடந்த ஆண்டு (23.11.2016) வெளியான விரிவுரையாளர் பணியிடங்களுக்கான தேர்வு முடிவுகளில்கூட, பதிவு எண், பிரிவு மட்டுமின்றி பெயரும் குறிப்பிடப்பட்டிருந்தது.

இயந்திரப் பொறியியல் (Mechanical Engineering) துறைக்கு 219 விரிவுரையாளர்கள் தேவை என்ற நிலையில், அதில் பொதுப்பட்டியலுக்கான 67 இடங்களில் 46 பேர் வெளி மாநிலத்தவர்கள் அழைக்கப்பட்டுள்ளனர். அதாவது, இத்துறையின் கீழ் தமிழ்நாட்டு மண்ணின் மக்களுக்கு பொதுப் பட்டியலில் கிடைக்க வேண்டிய இடங்களில் 68 விழுக்காட்டு இடங்கள் வெளி மாநிலத்தவர்க்கு தாரை வார்க்கப்பட்டுள்ளது.

அதேபோல், மின்னணு தொடர்பியல் (ECE) துறைக்குத் தேவைப்படும் 118 இடங்களில், பொதுப்பிரிவுக்கான 36 இடங்களில் 31 பேர் வெளி மாநிலத்தவர் ஆவர். அதாவது, இத்துறையின் கீழ் தமிழ்நாட்டு மண்ணின் மக்களுக்கு பொதுப் பட்டியலில் கிடைக்க வேண்டிய இடங்களில், 86 விழுக்காட்டு இடங்கள் வெளி மாநிலத்தவர்க்கு தாரை வார்க்கப்பட்டுள்ளது. இன்ஸ்ட்ருமென்டேசன் மற்றும் கட்டுப்பாட்டு பொறியியல் துறைக்கு எடுக்கப்பட்ட 3 பேரில் ஒருவர் வெளி மாநிலத்தவர்!

பல்தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிற்று மொழியாக ஆங்கிலம் இருப்பினும், தமிழ்வழிக் கல்வியில் பயின்றுவிட்டு சேரும் மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, தேர்வின்போது அவர்கள் தமிழிலும் எழுதலாம் என்ற நடைமுறை உள்ளது. இவ்வாறு எழுதுபவர்களில் கணிசமானவர்கள், கிராமப்புறங்களைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்கள் ஆவர். இனி, தமிழே தெரியாத வெளி மாநிலத்தவர்கள் விரிவுரையாளர்களாகப் பணியமர்த்தப்படுவதால், இந்த உரிமை அடியோடு ஒழிக்கப்படும்! தமிழில் நடத்தப்படும் பாடங்கள் ஆங்கிலத்தில் நடத்தப்படும். ஆங்கிலமும் பேசத் தெரியாத வெளி மாநிலத்தவர் இருப்பின், அந்த வகுப்பு மாணவர்களின் எதிர்காலமே கேள்விக் குறிதான்! எனவே, இந்த நியமனங்கள் காரணமாகத் தமிழ்நாட்டு மாணவர்களின் கல்வித்தரம் மிகக் கடுமையாகப் பாதிக்கப்படும்! பல்தொழில்நுட்பக் கல்லூரியில் பயிலும் தமிழ் மாணவர்களின் எதிர்காலம் வினாக்குறியாகும்!

குசராத்தில் 1995லிருந்தும், கர்நாடகாவில் 1986லிருந்தும், மேற்கு வங்கத்தில் 1999லிருந்தும் என - தமிழ்நாட்டைத் தவிர இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலும் மண்ணின் மக்களுக்கே வேலை என சட்டமியற்றப்பட்டுள்ளது. இந்தியத் தேசியம் பேசும் ஆம் ஆத்மி கட்சி ஆட்சியிலுள்ள இந்தியத் தலைநகர் தில்லியில், தில்லிப் பல்கலைக்கழகத்திலும், அதில் இணைக்கப்பட்டுள்ள அனைத்துக் கல்லூரிகளிலும் 85 விழுக்காட்டு இடங்கள் அம் மாநிலத்தவருக்கே வழங்க வேண்டுமென சூலை 2017 மாதம், தில்லி சட்டப்பேரவையில் அனைத்துக் கட்சியினரும் இணைந்து ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர்.

இந்நிலையில், தமிழ்நாட்டில் இந்திய அரசுப் பணிகளில் மட்டுமின்றி, தமிழ்நாடு அரசுப் பணிகளிலும் வெளி மாநிலத்தவர்கள் பணியமர்த்தப்படுவது மண்ணின் மக்களுக்கு இழைக்கப்படும் மாபெரும் அநீதியும், துரோகமும் ஆகும்!

கண்டன ஆர்ப்பாட்டத்தில் இந்த கருத்துகள் சுட்டிக் காட்டப்பட்டன.

# பெரியார் குறித்த பொய்யுரைகளுக்கு மறுப்பு

பொதுவாக ஆண்டின் சில குறிப்பிட்ட நாட்களில் மட்டுமே பேசுபொருளாக இருந்த பெரியார் இன்று ஹெச்.ராஜாவின் விரல் வித்தையில் ட்ரெண்டாகி இருக்கிறார். பெரியார் என்றும் ராமசாமி நாயக்கர் என்றும் இரு தரப்புகள் கருத்து மோதல் நடத்துகின்றன. ஒரு வகையில் இது ஆரோக்கியமான விஷயம்தான். விவாதங்களின் வழி வேறுபாட்டை ஒழிக்க வேண்டும் என்று பெரியாருமே ஆசைப்பட்டிருக்கிறார்தான். ஆனால் ராமசாமி என அடையாளப்படுத்தும் இளைஞர்கள் பலரும் வெறும் வாட்ஸ் அப்பில் வரும் அரைகுறை பார்வேர்டுகளை வைத்தே போர் தொடுக்கிறார்கள். 'அவர் நிஜமாகவே அப்படி சொன்னாரா? அப்படியென்றால் ஏன் சொன்னார்?' என திருப்பிக் கேட்டால் அவர்களிடத்தில் பதில் இல்லை. இப்படியான புரிதல் யாருக்கும் உதவப்போவதில்லை என்பதால் பெரியார் குறித்து சொல்லப்படும் சில அடிப்படை கேள்விகளுக்கான பதில்கள் இவை. இதில் எதுவுமே புதிது கிடையாது. பல ஆண்டுகளாக... பலராலும் சொல்லப்படும் பதில்களின் டைம்லி ரீமேக்தான். கவலைப்படாதீர்கள்! வாட்ஸ் அப் பார்வேர்டுகளை வைத்து உளறிக் கொட்ட ஹெச்ராஜா, எஸ்.வி சேகர் ஆகியோர் அடங்கிய ஸ்பெஷல் டாஸ்க் போர்ஸ் இருக்கிறது. தொடர்ந்து கன்டென்ட் தருவார்கள்.

### *இந்துமதத்தை மட்டும் எதிர்த்தாரா பெரியார்?*

இந்துமதத்தை மட்டுமே பெரியார் குறி வைத்தார் என்பதில் உண்மையில்லை. 'ஒரு மதமும் வேண்டாம் என்பதுதான் சரியான பேச்சும் திட்டமும் ஆகும். மதம், மக்களுக்கு விஷம். மதம், மனிதன் ஒற்றுமைப்படுவதை தவிர்க்கிறது. ஆகையால் எல்லா மதங்களும் இந்நாட்டிலிருந்து விரட்டப்பட வேண்டும். நான் எந்த மதத்திற்கும் விரோதிதான்' என 1936-ல் கொச்சியில் நடந்த கூட்டத்தில் பேசினார் பெரியார். கடவுள், மத, சாஸ்திர, புராண இதிகாச ஒழிப்பிற்கு ஒத்துழைக்கும் என்பதால் புத்தர் சொன்னவற்றை மட்டும் ஆதரித்தார். அதுவும் அது கொள்கைதான், மதமல்ல என்ற விளக்கத்தோடு. அறிவுதான் குரு என புத்தர் சொன்னதை வழி மொழிந்தார். அதேசமயம் பவுத்தர்கள் பெயரளவில்தான் அவர் கொள்கைகளை பின்பற்றுகிறார்கள் என்ற விமர்சனமும் அவருக்கு இருந்தது.

### *அவரின் பெரும்பான்மையான கருத்துகள் ஏன் இந்து மதத்தை மட்டும் குறிவைத்து இருந்தன?*

காரணம், இங்கே பெரும்பான்மையினரின் மதமாக அதுவே இருந்தது. அதில் இருக்கும் ஏற்றத்தாழ்வுகள் ஒருபெரும் கூட்டத்தையே பாதிக்கும் சங்கடங்களாக இருந்தன. அதனாலேயே அவர் தொடர்ந்து இந்து மதத்திற்கு எதிராக கடுமையாக குரலெழுப்பி வந்தார். 'இந்துமதம் வேதமதம், வேதம், கடவுளால் சொல்லப்பட்டது என்கிறார்கள். ஆனால் அதில் ஏன் ஒரு குறிப்பிட்ட பிரிவினர் மட்டும் படிக்கிறார்கள்? அவர்களுக்கு மட்டுமே வேதம் படைத்த கடவுள் எப்படி எல்லாருக்கு மானவராக இருக்கமுடியும்? வேதங்களில் இருந்துதானே சாதிப் பிரிவுகள் வந்தன? அப்படி சாதியின் பெயரால் மக்களைப் பிரிக்கும் மதம் வேண்டாம்' என்பதுதான் பெரியாரின் அடிப்படையான வாதம். ஆனால் தான் வளர்த்த ஆதரித்த குழந்தைகள் என்ன மதம் பயில வேண்டும் என்பதில் அவர் குறுக்கிடவே இல்லை. 'தங்களின் சிந்தனையால் அவர்கள் நாத்திகரானால் சரி' என கடவுள் வாழ்த்தைக் கூட அவர் மறுக்கவில்லை.

### *கடவுள் சிலைகளை நொறுக்கினாரா பெரியார்?*

எந்தக் கோவிலுக்குள்ளும் நுழைந்து சிலைகளை அடித்து நொறுக்கவில்லை பெரியார். 1953இல் தன் சொந்தக் காசில் பிள்ளையார் சிலையை வாங்கி அதை உடைத்தார். காரணம், அதே பார்ப்பன - சூத்திரக் கொள்கைதான். 'நீங்கள் கடலில் கரைக்கிறீர்கள். நான் அதையே உடைத்து மண்ணோடு மண்ணாக ஆக்குகிறேன்' என விளக்கமும் அளித்தார். இது தொடர்பாக வழக்கு தொடரப்பட்டது. 'பிள்ளையார் உருவத்தை அவர்களே செய்து அவர்களே உடைக்கிறார்கள். இதில் தவறு ஒன்றுமில்லையே' என வழக்கை தள்ளுபடி செய்தார் நீதிபதி ராமன் நாயர்.

### *தமிழர்களை காட்டுமிராண்டிகள் என வர்ணித்தாரா பெரியார்?*

இது பெரும்பான்மையானவர்கள் வைக்கும் குற்றச்சாட்டு. ஆனால் உண்மை? 'திராவிடத்தின் ஆதிமக்களான தமிழர்கள் தங்களின் கலாச்சார, பழக்க வழக்கங்களை அடியோடு மறந்துவிட்டார்கள். அவற்றை ஒரு பிரிவினர் மறைத்து விட்டார்கள். இப்போது தமிழன் கொண்டாடும் அனைத்துக் கலாச்சாரங்களும் அவனை அடிமை சமூகமாக நிறுவவே உதவி செய்கின்றன. அறுவடைத் திருநாள் தவிர்த்த பிற பண்டிகைகள் நாம் அடிமைப்பட்டுக் கிடக்கும் காட்டுமிராண்டித்தன்மைக்கே வழி வகுக்கின்றன. எனவே அடிமைத்தளையிலிருந்து வெளிவர வேண்டுமென்றால் சாதி இழிவை வளர்க்கும் கலாச்சாரங்களை பின்பற்றாதீர்கள்' - இதுதான் 1970இல் அவர்விட்ட அறிக்கையின் சாராம்சம்.

'நம்மில் சிலர் பணம், பதவிக்கு ஆசைப்பட்டு சாதி இழிவிற்கு துணைபோகிறார்கள். இந்து சட்டம், நீதிமன்றம் என அனைத்திலும் பார்ப்பனருக்கு ஒரு நீதி, சூத்திரர்களுக்கு ஒரு நீதி என்று இருக்கிறது. இதை லட்சியம் செய்யாமல் காட்டுமிராண்டி காலத்தவர்களாகவே இருக்கிறோம். இந்தப் புராண மாயையில் இருந்து வெளிவரவேண்டும்' என 1943-லேயே கட்டுரை எழுதியிருக்கிறார். அடிமைப்பட்டு கிடப்பது காட்டுமிராண்டித்தனம் என அவர் பல சமயங்களில் சொன்னதுதான் இப்போது வேறுவிதமாக திரிக்கப்பட்டுவிட்டது.

### *தமிழ்மொழி எதிர்ப்பாளரா பெரியார்?*

தமிழ்மறை திருக்குறளையும் திருவள்ளுவரையும் ஓரளவிற்கு ஏற்றுக்கொள்கிறார் பெரியார். ஆரிய எதிர்ப்பு என்ற புள்ளியில் அவர் திருவள்ளுவரோடு இணைகிறார். மற்றபடி சிலப்பதிகாரம், பகவத் கீதை போன்ற இலக்கியங்களை அவர் பொருட்டாக கருதவில்லை. தமிழை காட்டுமிராண்டி மொழி என்று அவர் கூறியதற்காக காரணம்? மொழி சீர்திருத்தம் மட்டுமே தமிழை அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்லும் என அவர் தீவிரமாக நம்பினார். ஆனால், அதற்கு யாரும் செவிசாய்க்காததால் இப்படி பழமையைக் கட்டி அழும் மொழி காட்டுமிராண்டி மொழி என்றார். மதப்பற்று, சாதிப்பற்று போல மொழிப்பற்றும் முரட்டுத்தனமாக இருக்கக்கூடாது. நெகிழ்வுத்தன்மை இருக்கவேண்டும் என அவர் விரும்பினார். அதேசமயம் இந்தித் திணிப்பையும், சமஸ்கிருத புனிதப்படுத்தலையும் தொடர்ந்து எதிர்த்தே வந்திருக்கிறார். அப்படிப்பட்டவர் ஆங்கிலத்தை மட்டும் கற்றுக்கொள்ள சொன்னது ஏன்? அவர் தமிழை விஞ்ஞானத் துறையில் புகுத்தி புதிய உலகை படைக்கவே விரும்பினார். ஆனால், நடைமுறை சிக்கல்களால் ஆங்கிலத்தை ஆதரித்தார். ஆங்கிலம் கற்றுக் கொள்வதன் மூலம் பொருளாதார ரீதியாக, அறிவுரீதியாக அடுத்தகட்டத்திற்கு செல்ல முடியும் என அவர் நம்பினார். அவர் அன்று சொன்னதுதான் இப்போது நடக்கிறது. ஆங்கிலம் வேலைவாய்ப்பில் முக்கிய இடம் வகிப்பதை மறுப்பதற்கில்லை.

### *பார்ப்பனர்களுக்கு எதிராக விஷத்தை பரப்பினாரா பெரியார்?*

பார்ப்பனியத்தை மட்டுமே பெரியார் எதிர்த்தாரே தவிர பார்ப்பனர்களை அல்ல. 'பாம்பைக் கண்டால் விடு, பார்ப்பானைக் கண்டால் விடாதே' என பெரியார் சொல்லி யதாக எங்குமே ஆதாரமில்லை. (அது ஒரு வடநாட்டுப் பழமொழி) முறையான பதிவுகளு மில்லை. 'பிராமணர்களுக்கும் நமக்கும் பிரமாதமான பேதம் ஒன்றுமில்லை. அவர்களின் சில பழக்க வழக்கங்களைத்தான் எதிர்க்கிறோம். அவர்கள் மனது வைத்தால் அதை எளிதில் மாற்றிக் கொள்ள முடியும். நாம் ஒருவருக் கொருவர் சமமாகவும் சகோதர உரிமையுடனும் இருக்க வேண்டும். அதில் பலாத்காரத்திற்கு இடமில்லை' என 1953இல் இராயப்பேட்டை கூட்டத்தில் சொன்னார் பெரியார்.

'எனக்கு எந்த சமுதாயம் மீதும் குரோதம் இல்லை. சமுதாயத்தில் பார்ப்பனர்கள் அனுபவிக்கிற உயர்வு மீதுதான் எனக்கு வெறுப்பு இருக்கிறது. இங்கே யாவரும் ஒருதாய்ப் பிள்ளைகள் என அவர்கள் கருதுவார்களேயானால் நான் போராட தேவையே இருக்காது' என 'பார்ப்பனத் தோழர்களுக்கு' அறிக்கையில் (1962) கூறுகிறார் பெரியார்.

'பார்ப்பான் மேல்சாதியாக இருக்கக்கூடாது என்பதுதான் என் எண்ணமே தவிர, அவன் பணக்காரனாக இருக்கக்கூடாது, நல்வாழ்வு வாழக்கூடாது என்பது என் எண்ணமில்லை' என இறப்பதற்கு ஓராண்டு முன்புகூட (1972) எழுதினார் பெரியார். ஆனாலும் அவரை ஒரு குறிப்பிட்ட பிரிவைச் சேர்ந்த மக்களுக்கெதிராக நிலை நிறுத்துவது தான் முரண்.

### *வளர்ப்பு மகளையே திருமணம் செய்தவரா பெரியார்?*

அண்ணா தேர்தல் அரசியலில் ஈடுபடப் போவதால் அவரை அடுத்த வாரிசாக அறிவிக்க முடியாத சூழ்நிலை பெரியாருக்கு. என்.அர்ஜுனன், ஈ.வெ.கி சம்பத் ஆகியோரை வாரிசுகளாக அறிவிக்கும் முயற்சிகளும் தோல்வியில் முடிகின்றன. இயக்கத்தின் வாரிசாக அறிவிக்க சரியான ஆள் மணியம்மைதான் என முடிவு செய்கிறார் பெரியார். ஆனால் அன்று இருந்த இந்துச் சட்டத்தின்படி ஒரு பெண்ணைத் தத்தெடுக்க முடியாது. வாரிசாக அறிவிக்க வேண்டுமென்றால் திருமணம் மட்டுமே செய்யமுடியும். எனவே அவர் காலங்காலமாக எதிர்த்துவந்த அதே இந்து சட்டத்தின்படியே திருமணம் செய்யவேண்டிய நிர்பந்தம். திருமணம் நடந்தபோது பெரியாரின் வயது 69. பிரம்மதேவனின் மாண்புமிகு புதல்வனான மன்மதன் வந்து அம்புவிட்டாலும் 69 வயதுக் கிழவருக்கு உடலாசை தோன்ற வாய்ப்பு இல்லை என்பதை பகுத்தறியும் அனைவருமே அறிவார்கள். எனவே இந்தக் குற்றச்சாட்டில் கொஞ்சமும் உண்மையில்லை.

### *விமர்சனங்களுக்கு அப்பாற்பட்டவரா பெரியார்?*

நிச்சயமாக இல்லை. கருத்து சுதந்திரத்தை பெருமளவில் மதித்தவர் பெரியார். ம.பொ.சி.யின் நண்பரான மாலி பெரியாரை கடுமையாக விமர்சித்து நாடகம் இயற்றிய போது, 'உன் கருத்தை நீ சொல்ற, அதுல தப்பு ஒண்ணுமில்ல' என்றார் பெரியார். அவ்வளவு ஏன்? பெரியாரை நேருக்கு நேர் எதிர்த்த ம.பொ.சியே, 'பொது வாழ்வில் அவர் கடைபிடித்து வரும் நேர்மை, கொள்கையில் இருக்கும் உறுதி ஆகியவற்றால் மாற்றுக் கட்சியினராலும் போற்றிப் புகழத் தக்கவர்' என 1962 பெரியார் பிறந்தநாள் மலரில் எழுதியுள்ளார். 'நான் சொல்லுவதில் பிசகிருந்தால் என் அறியாமையை மன்னியுங்கள்' எனச் சொல்லியிருக்கிறார் பெரியார். இங்கே விமர்சனங்கள் கூடாதென்பதில்லை. அவரை முழுமையாக படித்து விட்டு, ஏன், எதற்கு, எந்த காலக்கட்டத்தில் அப்படி சொன்னார் என்பதை தெரிந்துகொண்டு விவாதிப்பது மட்டுமே சரியான விமர்சனமாக இருக்கமுடியும்.

### *பெரியார் மறைந்து விட்டாரா?*

பெரியார் என்பது அவரின் பெயரல்ல. அது ஒரு சித்தாந்தம். பல நூறு ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றியதாகச் சொல்லப்படும் மனுவின் நீதியே இன்னும் உயிர்ப்போடு இருக்கும்போது நூறு ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றிய ஒரு சித்தாந்தம் அழிந்துவிடுமா என்ன அவரின் சிலையை அகற்றினால் சித்தாந்தம் அழிந்துவிடும் என்பதில்லை. பின் ஏன் இந்த எதிர்ப்பு? சிலையைக்கூட இங்கே தொட முடியாது என்ற உணர்வின் குரீயீடுதான் அது. முன்பைவிட இப்போது அதிகமாக பெரியாரிசம் பற்றி பேச வேண்டிய கட்டாயம் எல்லாருக்கும் இருக்கிறது. பேசுவோம். கருப்புச் சட்டை அதிகார வர்க்கத்தின் கண்களில் மிரட்சியைக் கொண்டுவரும் வரையில்... பெரியாரை புறக்கணித்துவிட்டு இங்கு அரசியல் செய்யமுடியாது என்ற நிலை இருக்கும் வரையில்... பேரென்ன எனக் கேட்டால் பெருமை விடுத்து பெயரை மட்டுமே சொல்லும் வரையில்... அடையாளங்களை அறிவிக்கக் கூச்சப்படும் நிலை இருக்கும் வரையில்... சாதி, மத ஏற்றத் தாழ்வுகள் இருக்கும் வரையில்... பெரியார் இருப்பார்!

**நன்றி : விகடன்.டாட்.காம்**

### சென்னை கருத்தரங்கில் விடுதலை இராசேந்திரன் பேச்சு (7)

# திரு.வி.க., வ.உ.சி., மறைமலையடிகளின் வைதிக எதிர்ப்பு

'ஆண்டாள் முதல் சங்கராச்சாரி வரை... தமிழை மறுக்கும் வேதமரபுகள்' என்ற தலைப்பில் ஜன.30, 2018 அன்று சென்னை இராயப்பேட்டை ஆனந்த் அரங்கில் திராவிடர் விடுதலைக் கழகம் நடத்திய கருத்தரங்கில் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் நிகழ்த்திய உரையின் விரிவாக்கம். (சென்ற இதழ் தொடர்ச்சி)

கோயில்களுக்கு பெரும் கோபுரங்கள் கட்டப் படுவதும் அந்தக் கோபுரங்களின் சிற்பக் கலைகள் குறித்து தமிழர் கட்டிடக் கலைப் பெருமை பேசுவதும் ஒரு பக்கம் இருக்கட்டும். கோயிலுக்கு முன் கோபுரங்கள் ஏன் கட்டப்பட்டன? அது பக்தர்கள் அனைவரையும் கோயிலுக்குள் அழைக்கத் தூண்டுவதற்காகவா? அது அனைத்து மக்களையும் கோயிலுக்குள் வாருங்கள் என்று வரவேற்கும் சிற்பக்கலை அலங்காரமா? நிச்சயமாகஇல்லை; பின் எதற்கு இந்தக் கோபுரங்கள்?

வரலாற்று ஆய்வாளரும் பல மன்னர்களின் வரலாற்றை நூலாக எழுதியவருமான இரா.சிவ. சாம்பசிவ சர்மா எழுதிய 'இராஜராஜசோழன்' நூலில் கோபுரங்கள் ஏன் கட்டப்பட்டன என்பதை இவ்வாறு விளக்குகிறார்:

"வர்ணாஸ்ரமங்களைக் கடை பிடித்தொழுகும் இந்துக்களில் சில ஜாதியார், கோயிலுக்குள் பிரவேசித்து, இறைவன் உருவினைக் கண்டு தொழுவதற்கு இயலாதவராய் இருத்தலின், அன்னார் நெடுநிலைக் கோபுரங்களைக் கண்டு தொழுது நற்பெய்துந் திருப்பெறவே வானளாவுங் கோபுரங்கள் அமைக்கப்பட்டன."

கோபுரம் கட்டப்பட்டதன் தத்துவமே கோயிலுக்குள் நுழைய வேத மதத்தால் தடை விதிக்கப்பட்ட, 'கீழ் ஜாதி'யினரான 'சூத்திரர்', 'பஞ்சமர்' வீதிகளில் நின்று தரிசிக்கவே உருவாக்கப்பட்டன. 'கோபுர தரிசனம் கோடிப் புண்ணியம்' என்று அதற்குப் பெருமையும் கற்பித்தது வேத மதம். அனைவருக்கும் கோயில் நுழைவதற்கான உரிமை வருவதற்கு முன்பு 'கோபுர தரிசனம்' தான் சூத்திரர் பஞ்சமருக்கான வழிபாடு; தமிழர்களை இப்படி அவமதித்தது வேத மரபு.

இந்த வர்ணாஸ்ரமக் கொடுமைகளை சுட்டிக்காட்டினாலே இந்துக்களின் விரோதிகள் என்று கூப்பாடு போடுகிறார்கள். ஆனால் கடவுள் நம்பிக்கையில் ஊறிய பார்ப்பனரல்லாத தமிழ் அறிஞர்களே இந்தக் கொடுமைகளைக் கடுமையாகக் கண்டித்திருக்கிறார்கள். பெரியார் மட்டும் கேட்கவில்லை. சைவநெறியில் ஆழமாக ஊறிப்போய் சன்மார்க்க நெறியையே வாழ்க்கையாகக் கொண்டு 'தமிழ்த் தென்றல்' என்று வரலாறு போற்றும் திருவிகல்யாண சுந்தரனார் என்ற திருவி.க. அவர்களே வைதீகத்தை பார்ப்பனிய மதத்தைக் கடுமையாக சாடியிருக்கிறார். காங்கிரஸ் கட்சியில் பெரியாரோடு சமகாலத்தில் பயணித்தவர் திருவி.க. காங்கிரஸ் கட்சி நடத்திய 'நவசக்தி' பத்திரிகையின் ஆசிரியராகவும் சில காலம் பணியாற்றினார். அந்த 'நவசக்தி' பத்திரிகையில் அது ஒரு தேசிய கட்சியின் பத்திரிகை என்றாலும் துணிந்து வேதமதத்தைக் கண்டித்து எழுதியிருக்கிறார். உதாரணத்துக்கு ஒன்றை மட்டும் கூறுகிறோம்:

6.5.1931 நாளிட்ட 'நவசக்தி' பத்திரிகையில் திருவி.க. எழுதிய துணைத் தலையங்கத்தின் ஒரு பகுதி இது:

"இன்னார் இந்து, இன்னார் இந்து அல்ல என்று வரையறுத்துக் கூறும் அதிகாரம் யாருக்கு உண்டு? வேதத்தை ஆதாரமாகக் கொள்பவர்கள் தான் இந்துக்கள் ஆவார்கள் என்று எங்கு சொல்லப்பட்டிருக்கிறது? இந்துக்கள் எல்லோருக்கும் வேதம் தெரியுமா? வருணாசிரம இந்து மதத்தில் எல்லோருக்கும் வேதம் தெரியுமா? வேதம் படிக்கவே உரிமையில்லாதவர்கள் வேதத்தை எப்படி ஒப்ப முடியும்? சங்கராச்சாரியார் எல்லா இந்துக்களுக்கும் குருவா?"

- என்று கேட்டார் திருவி.க.

அதே துணைத் தலையங்கத்தில் இன்னும் அழுத்தமாகவே எழுதுகிறார்:

"ஒருவன் கோவிலுக்குப் போவது, போகாமல் இருப்பது, மதச் சின்னங்கள் அணிவது, அணியாமல் இருப்பது, உருவத்தை வழிபடுவது அல்லது வழிபடாமல் இருப்பது, ஆத்திகம் பேசுவது, நாத்திகம் பேசுவது ஆகிய காரியங்களில் எது வேண்டுமானாலும் செய்து கொண்டும், செய்யாம லிருந்து கொண்டும் இந்துவாக இருக்கலாம்... வேதாந்த மதக் காரரான சங்கராச்சாரியார், வர்ணாஸ்ரமத்தில் ஏன் விழ வேண்டும்? வேதத்தை ஆதாரமாகக் கொண்டு இவர் இந்து, இவர் இந்துவல்ல என்று சொல்லும் சங்கராச்சாரியார், வேதத்தின்படி நடக்காதவர்களை எல்லாம் இந்து அல்ல என்று விலக்குவாரா? பார்ப்பன வக்கீல்கள் இந்துக்களாவார்களா? அவர்கள் இந்துக்கள் அல்ல என்று சங்கராச்சாரி ஏன் கூறவில்லை?"

- என்று கேட்கிறார் தமிழ்த்தென்றல் திருவி.க.

வேதம் படிக்கும் 'தர்மத்தை'ப் பாதுகாக்க வேண்டிய 'பிராமணர்', வேத தர்மங்களுக்கு எதிரான 'சட்டநீதி'களைப் படித்துவிட்டு வழக்கறிஞர் களாவது, வேத தர்மமாகுமா? என்ற ஆழமான கேள்வியை எழுப்பினார் திரு.வி.க. சங்கராச்சாரி களிடம் இதற்கு பதில் இல்லை.

வேத மதத்தை - தமிழ் மரபுகள் கடுமையாக எதிர்த்தன என்பதற்கு மற்றொரு உதாரணம் 'கப்பலோட்டிய தமிழன்' என்ற பெருமை பெற்ற சுதந்திரப் போராட்ட வீரர் வ.உ.சிதம்பரனார், பிரிட்டிஷ் கம்பெனிக்கு எதிராக சுதேசிக் கப்பல் விட்டு பெரும் பொருளிழப்புக்கு உள்ளாகி, ஏழ்மைக்குத் தள்ளப்பட்ட சைவத் தமிழர் வ.உ.சி., அவரே தன்னை வேதப் பார்ப்பனர்கள் எப்படி அவமதித்தார்கள் என்பதை சென்னை நேப்பியர் பூங்காவில் ஆற்றிய உரை ஒன்றில் வெளிப்படுத்தினார்.

"நீதிக் கட்சி தோன்றிய பிறகுதான் தமிழர் களின் அந்தஸ்து உயர்ந்துள்ளது. நீதிக்கட்சி தான் தமிழ் மக்களிடத்துப் பிடிப்பும் – தமிழர் களின் வாழ்வில் ஒரு உருப்படியான

> **கோயில் கோபுரங்கள் கட்டப்பட்டது ஏன்?**

சேவையையும் செய்துவிட்டது. உதாரணமாக நான் முன்பெல்லாம் 'இந்து' பத்திரிகை அலுவலகத்துக்குச் சென்ற போது திரு.கஸ்தூரி ரெங்க அய்யங்கார் ('இந்து' பத்திரிகையின் ஆசிரியர்), "வாடா, சிதம்பரம்" என்றழைத்துப் பேசுவார். ஆனால் நீதிக்கட்சிக் கொள்கை தமிழ் நாட்டில் கோலோச்சிய பிறகு ஒரு நாள் போனேன். "வாங்கோ, சிதம்பரம் பிள்ளை, சவுக்கியமா?" என்றழைத்தார்" – என்றார் வ.உ.சி.

வ.உ.சி. - சைவப் பற்றாளர். தேசத் துரோக வழக்கை பிரிட்டிஷ் ஆட்சி அவர்மீது போட்டபோது அவருக்கு உதவிட எந்த காங்கிரஸ் தலைவரும் முன்வரவில்லை. பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராக வ.உ.சி.க்கு சாட்சி சொல்லப் போவதாக தொடர் வண்டியில் புறப்பட்டுச் சென்ற பாரதி நீதிமன்றம் போகாமலேயே பாதி வழியில் இறங்கிவிட்ட வரலாற்றுக் குறிப்பும் உண்டு.

திரு.வி.க.வைப்போலவே வேத மதத்தைக் கடுமையாக எதிர்த்தவர் வ.உ.சி. 5.11.1927இல் சேலம் ஜில்லா அரசியல் மாநாட்டுக்கு தலைமை வகித்துப் பேசிய வ.உ.சி., ஒரு காலத்தில் பிராமணரல்லாத தமிழர்கள்தான் பிராமணர்களை - அவர்களின் உணவு முறை, யாகங்களைக் கண்டு ஒதுக்கி வைத்தார்கள் என்றும், 'கண்டதைத் தின்பவர்கள்; நினைத்ததை செய்யக் கூடியவர்கள் பிராமணர்கள்' என்று தமிழர்கள் கூறியதோடு, 'நிகண்டு' முதலிய நூல்களில் எழுதியும் வைத்தார்கள்" என்று கூறிய வ.உ.சி., "அந்த இழிவிலிருந்து தங்களை மீட்டுக் கொள்ளவே தங்களைப் பிராமணர்கள் என்றும் ஏனைய தமிழர்களை 'சூத்திரர்' என்று சொல்லவும், எழுதவும் தொடங்கினார்கள் என்று கூறினார். வேத மதம் பார்ப்பனரல்லாதாருக்கு வழங்கிய தண்டனை யிலிருந்து விடுவித்துக் கொள்ள வந்ததே வகுப்புவாரி பிரதிநிதித்துவம். அந்த அதிகாரத்தை மீட்டுத் தர வந்தவர்தான் ஈ.வெ.ராமசாமி என்றும் பேசியிருக் கிறார். அவரது உரை இது:

"தாங்கள் மேலான ஜாதியார்கள் என்று கொண்ட கொள்கை அழியாதிருக்கும் பொருட்டுப் பிராமணர்கள் மற்றைய ஜாதி யார்களுக்கு விதித்த, அபராதத் தண்டனையை மாற்றிக் கொள்வதற்குரிய அதிகாரம், பிராமண ரல்லாதார்கள் கையிலேயே இருக்கின்றதைக் கண்டுபிடித்து, நம் திருவாளர் ஈ.வெ.இராமசாமி நாயக்கர் அவர்கள், பிராமணரல்லாதார் களுக்குக் கூறி, அதனை உபயோகிக்கும்படி செய்து கொண்டு வருகிறார்கள். அவ்வதிகாரத்தைப் பிராமணரல்லாதவர்கள் ஊக்கத்துடன் உறுதியாகச் செலுத்தித் தங்கள் அபராதத் தண்டனையை மாற்றிக் கொள்வார்கள் என்று நம்புகிறேன்"

- என்று வீர உரையாற்றி, வைதிக - எதிர்ப்பு வீரர் என்பதை அடையாளம் காட்டினார்.

திருவி.க., வ.உ.சி.யைப் போலவே மற்றொரு தமிழ் அறிஞரும், வடமொழிக்கு எதிராகக தனித்தமிழ் இயக்கம் நடத்தியவருமான மறைமலையடிகளும் வைதிக மதத்தின் எதிர்ப்பாளர் என்பதையும் இளைய தலைமுறை புரிந்து கொள்ள வேண்டும். தமிழர்களை 'சூத்திரர்' களாக இழிவுபடுத்துவதற்காகவே பார்ப்பனர்கள் மனுஸ்மிருதி போன்ற ஸ்மிருதிகளை எழுதி, தமிழரை நான்கு வர்ணங்களாகப் பிரித்து, அந்த ஏற்பாடு கடவுளால் உருவாக்கப்பட்டது என தமிழர்களை நம்ப வைத்தார்கள் என்று வைதிகத்தைக் கடுமையாக சாடினார்.

"தம்மை எல்லாரினும் உயர்ந்த பிராமணர் எனவும், ஆரியரல்லாத தமிழரை சத்திரியர், வைசியர், சூத்திரர் எனவும் பிரித்து, **இவ் வேறுபாடு கடவுளால் வகுக்கப்பட்டது என எழுதி** மெல்ல மெல்ல வேதங்கள், உப நிடதங்கள் முதலியவற்றின்கண், பிராமணர்கள் அவ்வெழுத்தை நுழைத்து விடுவராயினர். களங்கமில்லாத உள்ளத்தினரான தமிழர் அவ்வாறு அவர் நுழைத்தபோது அவ்வேற் பாட்டினை உண்மையென நம்பத் தலைப்பட்டார். அதனை மேலும் மேலும் வலியுறுத்தி விரித்து மனு முதலான மிருதி நூல்களை எழுதி வைக்கலாயினர்"

என எழுதிக் காட்டினார். (மறை மலையடிகள் எழுதிய 'வேளாளர் நாகரிகம்' நூலிலிருந்து)

இது மட்டுமல்ல; வேத மதக்காரர்களின் இந்த பொய்யுரையை நம்பி தொல்காப்பியம் போன்ற பழந்தமிழ் நூல்களுக்கு உரை எழுதிய இளம்பூரணர், நச்சினார்க்கினியர் போன்ற உரையாசிரியர்களும், வேதமதப் பார்வையிலேயே 'பிராமண தர்மத்தை' உயர்த்தி உரை எழுதினர் என்றும், மறைமலையடிகள் அதே நூலில் சுட்டிக் காட்டியிருக்கிறார். வரலாற்று ஆசிரியர்களும் வரலாற்றை வேத பார்ப்பனியத்தில் மயங்கிய நிலையிலேயே எழுதியதையும் மறைமலையடிகள் அதே நூலில் குறிப்பிடுகிறார்:

"இவ்விந்திய நாட்டிற் சரித்திர நூல்களும் அவற்றின் வழியே மெய் இது, பொய் இதுவெனப் பகுத்துக் காணும் சரித்திர உணர்வும் இல்லாமையால் ஆரிய பார்ப்பனர் தமிழ் நன்மக்களைத் தாழ்த்துவதற்குச் செய்த இச்சூழ்ச்சிகளை அறியாமல், அவையெல்லாங் கடவுள் வகுத்த ஏற்பாடு, எனவே நம்பி அவற்றிற்கு மாறாக ஏதும் கூற மாட்டாராய், நூலாசிரியர் கருத்துக்கு முரணான அவர்கள் அங்ஙனம் பிழைபட்ட உரைகள் எழுதியது ஒரு வியப்பன்றென்க" - என்று எழுதுகிறார்.

வேத - பார்ப்பனிய பண்பாட்டை பெரியார் எதிர்த்ததால், 'இந்து விரோதி' என்று கூச்சல் போடு கிறவர்கள், திரு.வி.க., வ.உ.சி., மறைமலையடிகள் போன்றவர்கள் எதிர்ப்புக்கு என்ன பதிலைக் கூற முடியும்?

(அடுத்த இதழில் முடியலாம்)

## 2000 துண்டறிக்கைகளை வழங்கி மாணவர்களிடையே விழிப்புணர்வு பிரச்சாரம்

'மாணவர்களே! இருள்சூழ்ந்து நிற்கிறது நமது எதிர்காலம்' என்ற தலைப்பில் தமிழக மாணவர்களின் பறிபோகும் கல்வி, வேலை வாய்ப்பு குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாக தமிழ்நாடு மாணவர் கழகம் சார்பில் சென்னையில் பிப். 24 அன்று காலை விவேகானந்தர் கல்லூரி, இராணி மேரி கல்லூரி, எம்.ஜி.ஆர் ஜானகி, எஸ்.ஐ.வி.டி ஆகிய கல்லூரி மாணவர்களிடையே துண்டறிக்கை பிரச்சாரம் செய்யப்பட்டது. மாணவர் கழக அமைப்பாளர் பாரி சிவக்குமார், தோழர்கள் யுவராஜ், காவை கனி, ராஜேஷ், பிரபாகரன் ஆகியோர் பங்கேற்றனர். 2000 துண்டறிக்கைகள் மாணவர்களிடம் வழங்கப்பட்டது.

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/16-18 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2016-2018
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# இராமராஜ்ய இரதயாத்திரை - பெரியார் சிலை உடைப்புகளுக்கு எதிர்வினையாற்றிய சென்னை, மயிலாடுதுறை, சேலம் தோழர்கள் கைது!

“இராமராஜ்ய இரதயாத்திரை’ தமிழகத்துக்குள் நுழைவதை எதிர்த்து, காவிப் பயங்கரவாத எதிர்ப்புக் கூட்டமைப்பு தமிழக எல்லையில் மறியல் போராட்டம் நடத்தி, பல்லா யிரக்கணக்கில் கைதாகி, தமிழ் மண் மதக் கலவரத்துக்கு அனுமதிக்காது; இது பெரியார் மண் என்பதை இந்தியா முழுமைக்கும் உணர்த்தியது. எச்.ராஜா என்ற பார்ப்பனர், திரிபுராவில் லெனின் சிலை உடைப்பை நியாயப்படுத்தி, தமிழ் நாட்டிலும் பெரியார் சிலை உடைக்கப்படும் என்று பதிவிட்டதைத் தொடர்ந்து, பெரியார் சிலை உடைப்புகள் தொடங்கிய நிலையில் அதற்கு எதிர்வினைகளும் எழுந்தன. சென்னையில் மயிலாப்பூர் பகுதியில் வர்ணாஸ்ரமத்தை அடையாளப்படுத்தி, தாங்கள், ‘பிராமண பிறப்பில்’ வந்தவர்கள் என்று அடையாளப்படுத்தும் ‘பூணூலை’ கழகத் தோழர்கள் சில பார்ப்பனர்களிட மிருந்து அறுத்து எதிர்வினை யாற்றினர்.

இதில் இராவணன், உமாபதி, இராஜேஷ், பிரபாகரன் ஆகிய நான்கு தோழர்கள் காவல்துறையில் தாமாகவே முன்வந்து சரணடைந்தனர்.

மயிலாடுதுறையில் இராமராஜ்ய யாத்திரை, பெரியார் சிலை உடைப்பு களுக்கு எதிர்வினையாக ‘சூத்திரன் தவம் செய்யக் கூடாது’ என்பதற்காக அவன் தலையை வெட்டிய ‘ராமன்’ (வால்மீகி இராமாயணம் அப்படி கூறுகிறது) படத்தை செருப் பாலடித்து ஆர்ப்பாட்டம் நடத்தினர். ‘சூத்திரர்’ களை இழிவு செய்யும் இராமர் யாத்திரையை தமிழகம் ஏற்காது என்று முழக்கமிட்டு கைதானார்கள். சென்னை மற்றும் மயிலாடுதுறை தோழர்கள் கைது செய்யப்பட்டு முறையே சென்னை, திருச்சி சிறையில் அடைக்கப்பட்டு, இப்போது நிபந்தனை பிணையில் விடுதலையாகியுள்ளனர். ஆனால் பெரியார் சிலையை உடைக்கத் தூண்டிய எச்.ராஜா மீது எந்த வழக்கையும் தமிழக அரசு பதிவு செய்யவில்லை.

இராமனை செருப்பாலடித்ததாக 14 தோழர்கள் கைது செய்யப்பட் டனர். மீத்தேன் எதிர்ப்பு கூட்டியக்க ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் ஜெயராமன் கண்டன ஆர்ப்பாட் டத்துக்கு ஆதரவு தெரிவித்து பங்கேற்றதால் அவரும் கைது செய்யப்பட்டார். மயிலாடுதுறை திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள் மகேஷ், நடராசன், மகாலிங்கம், இளையராஜா, செந்தில் குமார், நாஞ்சில் சங்கர், விஜயராகவன், தில்லைநாதன், கார்த்திக், திராவிடன் ஜாஹிர், கவிஞர் முருகதாசன், சுப்பு மகேஷ் (தமிழர் உரிமை இயக்கம்), ராஜசேகரன் (மக்கள் அரசு கட்சி) ஆகிய 14 தோழர்கள் கைது செய்யப் பட்டனர்.

பூணூல் அறுப்பைக் கண்டித்து நடிகர் எஸ்.வி. சேகர் தலைமையில் மயிலாப்பபூரில் பார்ப்பனர்கள் பொதுக் கூட்டம் நடத்தினர். இராமன் படம் செருப்பால் அடிக்கப்பட்டதை எதிர்த்து மயிலாடுதுறையில் வணிகர்களை கடையடைப்பு செய்யு மாறு பா.ஜ.க.வினர் மிரட்டி கடைகளை மூட வைத்தனர்.

இராமன் படத்தை அவமதித்ததால் கழகத் தோழர் நாஞ்சில் சங்கர் மரணமடைந்துவிட்டதாக முகநூல் வழியாக பொய்யான தகவல்களை போலிப் படங்களை தயாரித்து பரப்பியதோடு, தோழர்களுக்கும் பேராசிரியர் ஜெயராமன் அவர்களுக்கும் கொலை மிரட்டல்களை விடுத்து வருகின்றனர். இது குறித்து ‘சைபர் கிரைம்’ துறையிலும் காவல் துறையிடத்திலும் நடவடிக்கை எடுக்குமாறு புகார் அளிக்கப்பட் டுள்ளது.

வடநாட்டு வர்ணாஸ்ரம இராமனை தமிழ்மண் ஏற்காது என்பது கடந்த 70 ஆண்டுகளுக்கு மேலாகவே தமிழ்நாட்டில் எதிர்ப்புகள் எழுந்து வருகின்றன. பெரியார் திடலில் ‘இராவண லீலா’வை 1974ஆம் ஆண்டு அன்னை மணியம்மையார் நடத்தியபோது இராமன், சீதை உருவங்கள் எரிக்கப்பட்டன. அப்போது தொடரப்பட்ட வழக்கில் மணியம்மையார் உள்ளிட்ட தோழர்களை விடுதலை செய்த நீதிமன்றம், இது வழக்கமாக பெரியார் பின்பற்றும் போராட்ட வடிவம் தான் என்று தீர்ப்பளித்தது. பெரியார் மட்டுமின்றி, சைவத்தை ஏற்ற தமிழறிஞர்களான மறைமலையடிகள், பூரணலிங்கம் பிள்ளை போன்ற தமிழறிஞர்களும் இராமாயணத்தை விமர்சித்துள்ளனர். இராஜகோபாலாச் சாரியே ‘இராமன்’ கடவுள் அல்ல; அவன் ஒரு இதிகாசப் பாத்திரம் என்று கூறியதோடு, இராமன் மீது விமர்சனத்தையும் முன் வைத்துள்ளார்.

அதேபோன்று சேலத்தில் சங்கரமடம் தாக்கப்பட்ட வழக்கில் நங்கவள்ளி கிருஷ்ணன், மனோ, இராஜேந்திரன் ஆகிய கழகத் தோழர்கள் கைது செய்யப்பட்டு 8 நாள் சிறை வாசத்துக்குப் பிறகு சேலம் சிறையிலிருந்து, மார்ச் 27 அன்று நிபந்தனை பிணையில் விடுதலையானார்கள். கழகத் தலைவர் கொளத்தூர் மணி, தோழர்களுடன் சென்று சிறை வாயிலில் வரவேற்றார்.

## இராமர் ரதயாத்திரை–பெரியார் சிலை உடைப்புகளைக் கண்டித்து ஆர்ப்பாட்டங்கள்

கடந்த 20ஆம் தேதி புதுக் கோட்டையில் தந்தை பெரியாரின் சிலை உடைக்கப்பட்டதைக் கண்டித் தும், இராம ரதயாத்திரையைக் கண்டித்தும் நாமக்கல் மாவட்டம் சார்பில் பள்ளிப்பாளையத்தில் தோழமைக் கட்சிகள் ஒன்றிணைந்து 20.3.2018 செவ்வாய்க் கிழமை மாலை 4 மணிக்கு கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தின.

கண்டன ஆர்பாட்டத்திற்கு திவிக நாமக்கல் மாவட்ட தலைவர் சாமிநாதன் தலைமை வகிக்க, மாவட்ட பொருளாளர் முத்துப் பாண்டி முன்னிலையில் ஆர்ப்பாட் டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட செயலாளர் சரவணன் வரவேற்புரையாற்றினார். மேலும், திராவிடர் விடுதலைக் கழகத்தைச் சேர்ந்த, குமாரபாளையம் நகரத் தலைவர் தண்டபாணி, பள்ளிப்பாளை யம் சஜீனா, மீனா, தமிழ் தேசியக் கட்சியைச் சேர்ந்த ஆதவன் மற்றும் புரட்சிகர இளைஞர் முன்னணியைச் சேர்ந்த மாணிக்கம் ஆகியோர் தங்களது கண்டன உரையை பதிவு செய்தனர். இறுதியாக தோழர் கவுதமன் நன்றி யுரையாற்றினார்.

**திருப்பூர் :** பெரியாரின் சிலை உடைக்கப்பட்டதை கண்டித்து, பெரியாரிய கூட்டமைப்பு சார்பில் தோழமைக் கட்சிகள் ஒன்றிணைந்து திராவிடர் விடுதலைக் கழகம் தலைமையில் 07.3.2018 மாலை 5 மணிக்கு திருப்பூர் பெரியார் சிலை அருகில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இக்கண்டன ஆர்பாட் டத்திற்கு திவிக திருப்பூர் மாவட்ட தலைவர் முகில்ராசு தலைமை வகித்தார். ஆர்ப்பாட்டத்தில் 50க்கும் மேற்பட்ட தோழர்கள் கலந்து கொண்டு எச். ராஜா உருவ பொம்மையை செருப்பால் அடித்து கண்டன முழக்கங்களை எழுப்பினர்.

**கண்டமங்கலம் :** 24-03-2018 அன்று மாலை 4.30 மணியளவில் விழுப்புரம் மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் கண்டமங்கலத்தில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தை பெரியார் ஜெயரட்சகன் ஒருங்கிணைத்தார் நிகழ்வில் மாவட்ட துணைத்தலைவர் அழகுமுருகன் பெரியார் தி.வி.க ஒருங்கிணைப்பாளர் கோகுல் காந்திநாத், பெரியார் சிந்தனையாளர் இயக்க செயலாளர் தீனா, தமிழக வாழ்வுரிமைக் கட்சி விழுப்புரம் மாவட்ட தலைவர் நாகு, புதுச்சேரி தமிழக வாழ்வுரிமைக் கட்சி பரப்புரை செயலாளர் விஜி, கண்டமங்கலம் திராவிடர் கழக பெரியார் பெருந் தொண்டர் ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர் சோமசுந்தரம் ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றினார்கள்.


கண்டன ஆர்ப்பாட்டத்தில் விழுப்புரம் கிழக்கு மாவட்டத் தலைவர் பூ.ஆ.இளையரசன் தலைமை உரைக்கு பின் விழுப்புரம் மாவட்டச் செயலாளர் இராமர், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி விழுப்புரம் மாவட்டச் செயலாளர் ஆற்றலரசு ஆகியோர் பெரியார் சிலை உடைப்பை கண்டித்தும் பார்ப்பன ஆதிக்கத்தையும் ஆர்.எஸ்.எஸ்-ன் மக்கள் விரோத செயலை கண்டித்து சிறப்புரையாற்றினார்கள்.

**தூத்துக்குடி :** 22.03.3018 அன்று தூத்துக்குடி திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் விஸ்வ இந்து பரிசத் அமைப்பின் இரத யாத்திரை தூத்துக்குடி வருவதைக் கண்டித்து பெரியார் சிலை முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. கழக மாவட்ட தலைவர் குமார் தலைமையில், ஆதித் தமிழர் கட்சி மாநில தென் மண்டல செயலாளர் இரா. வே.மனோகர் முன்னிலையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் கழக தூத்துக்குடி மாவட்ட பொருளாளர் சந்திரசேகர், பால். அறிவழகன், ஆதித்தமிழர் பேரவையின் மாநில அமைப்பு செயலாளர் அருந்ததி அரசு , ஆதித் தமிழர் கட்சியின் மாவட்ட பொறுப்பாளர் மாரிச்செல்வம் ஆகியோர் கலந்து கொண்டு தூத்துக்குடி தென்பாகம் காவல் நிலையத்தில் கைது செய்து அடைக்கப்பட்டு மாலை விடுதலை செய்யப்பட்டனர்.

### திருப்பூர் மாவட்ட வழக்கு நிதி ரூ.3600

பெரியார் சிலை உடைக்கப் பட்டதையடுத்து, எச்.ராசா, மத்திய பா.ஜ.க அரசை கண்டித்து பார்ப்பனர் களின் பூணூல், உச்சிக்குடுமியை அறுத்தெறிந்து, சிறை சென்ற தோழர் களுக்கு வழக்கு நிதியாக திருப்பூரில் 12.3.18 அன்று நடைபெற்ற பெண்ணே எழு, விடுதலை முழக்கமிடு! மாவட்ட மாநாட்டில் பொது மக்களிடம் துண்டேந்தி தோழர்கள் ரூ.3600 வசூல் செய்து சென்னை மாவட்ட செய லாளர் உமாபதியிடம் அளித்தார்கள்.


## ‘நிமிர்வோம்’ – மார்ச் 2018 இதழ்




- தமிழர் பண்பாட்டில் – வைதிக ஊடுறுவல் – வரலாற்று ஆதாரங்களை முன் வைத்து ஒரு விரிவான அலசல்.
- ‘நீட்’ தமிழக சுகாதார கட்டமைப்புகளைக் குலைக்கிறது.
- போப்பிடம் கடவுளை மறுத்த ஸ்டீபன் ஹாக்கிங்.
- ‘இராமன்’ நேர்மையின் உருவமா? – பெரியார்
- உயர்கல்வியில் ஒடுக்கப்பட்ட சமூக மாணவர்களின் தற்கொலைக்கு என்ன காரணம்?
- அம்பேத்கர் பல்கலைக்கழகத்துக்கு ஆர்.எஸ்.எஸ். துணைவேந்தர்; ‘காவிப் பிடியில் அதிகார மய்யங்கள்.
- இந்து மதத்திலிருந்து விலகும் லிங்காயத்துகள் வரலாறு.

மற்றும் பெரியார் சிந்தனைகளுடன்...
தனி இதழ் விலை : ரூ.20
தொடர்புக்கு: நிர்வாகி, 95, டாக்டர் நடேசன் சாலை, அம்பேத்கர் பாலம், மயிலாப்பூர், சென்னை-600 004.
தொலைபேசி எண்: 044 24980745/7299230363
www.dvkperiyar.com/nimirvomdvk@gmail.com


Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 31st March 2018

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN